RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s818

OPEN ACCESS

# அழகியல் மரபும் சில கோட்பாடுகளும்

ஏ. ராஜசேகர் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அடையாறு, சென்னை-600020, தமிழ்நாடு, இந்தியா

# Aesthetic Tradition and it's few Theories

E. Rajasekar [a, *]

[a] Department of Tamil, Patrician College of Arts and Science, Adyar, Chennai–600020, Tamil Nadu, India

* Corresponding Author: rajasekar@patriciancollege.ac.in

Received: 23-04-2021
Revised: 03-05-2022
Accepted: 11-05-2022
Published: 20-07-2022

Check for updates

**ABSTRACT**

The basis of the aesthetic thought of Tamilians is their art and literature. Thus, Tolkappiyam is the best source for recording the tradition of Tamil aesthetic thought. Similarly, there are many references to the concept of beauty in Sangam literature. Although Tamil literature has recorded the term beauty related to literary creation and artwork, research on the term has not been carried out in the field of Tamil literary criticism. It is noteworthy that the first book written to explain Murugu or beauty in Tamil is Thiru. V. Kalyana Sundaranar's Murugan or Beauty. In this book, aesthetics are explained in some places with religious affiliation and in some places without religious affiliation. Given the definition of beauty, it is impossible to say with certainty that this is beauty. But there is a custom in the ancient Tamil society of dividing beauty into two categories: natural beauty and artificial beauty. Such beauty is formed according to the ideas that man has absorbed in the world. Similarly, the vision of beauty is formed according to the training of the senses. In particular, beauty differs according to his knowledge, experience, environment, and imagination. That is why the study of beauty is called aesthetics. Aesthetics is not only the study of beautiful things but also includes the study of things that are considered unattractive. Although everyone can get explanations for aesthetics from the perspective of approaching art in their own understanding, it is impossible to accept these alone as the final explanation of aesthetics. The reason is that aesthetics is different according to their understanding.

**Keywords:** Sangam literature, Murugu, Aesthetics, Beauty

## முன்னுரை

அழகு பற்றிய சிந்தனை பழங்காலந்தொட்டு இருந்து வருகின்றது. இதன்படி, இறைவனையும் இயற்கையையும் அழகெனக் கருதிப் போற்றும் பாங்கைப் பரவலாகத் தமிழ் இலக்கியங்களில் காணமுடியும்.

தமிழர்கள் அழகினைப் பல்வேறு சொற்களால் குறித்தனர். இப்பின்னணியில் அழகு என்னும் சொல்லுக்குப் பிங்கல நிகண்டு, ஏர், வனப்பு, எழில், இராமம், காரிகை, மா, அம்மை, கவின், செழுமை, பந்தம், தேசிகம், நோக்கு, அணி, அணங்கு, யாணர், பாணி, மாதர், மாழை, சாயல், வகுப்பு, வண்ணம், வளம், பூ, பொற்பு, சேடு, பொன், சித்திரம், பத்திரம், மாமை, தளிமம், மயம், மஞ்சு, மதன், பாங்கு, அம், சொக்கு, சுந்தரம், தோட்டி, ஐ, ஒப்பு, அந்தம், ஒண்மை, விடங்கம், அமலம், குழரு, கோலம், வாமம், காந்தி, அலங்காரம், கொம்மை, மனோகரம், சாரு எனப் பல்வேறு சொற்களை விளக்கமாகச்

சுட்டுகின்றன (Sasivalli, 1995). இதோடு மட்டுமல்லாமல் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய ஆசிரிய நிகண்டும் அழகு என்பதற்குப் பல்வேறு சொற்களை வழங்கியுள்ளன. அவை, அணங்கு, அணி, அந்தம், அம், அம்மை, அலம், அற்புதம், ஆரியை, இராமம், எழில், ஏர், ஐ, ஒப்பு, கட்டளை, கந்தி, கவின், காமர், காரிகை, காள், குலம், குழகம், கேழ், கோலம், சந்தம், சவி, சார்வு, சாரு சித்திரம், சீர், சுந்தரம், செவ்வி, செழுமை, சேடு, சொக்கு, தகை, தளிமம், தேசிகம், தேன், தொட்டில், நல்கு, நலம், நவ்வி, நோக்கு, பத்திரம், பாங்கு, பாணி, பூ, பெண்மை, பேதை, பொற்பு, பொன், மஞ்சு, மணி, மதன், மயன், மருகல், மா, மாதர், மாழை, யாணர், வகு, வனம், வரி, வண்ணம், வடிவு, விடங்கம், வாமம் என இடம்பெற்றுள்ளன (Sasivalli, 1995). சங்க இலக்கியப் பாடல்களில் முருகு என்னும் பழந்தமிழ்ச்சொல் அழகு என்னும் பொருளிலும், குறிஞ்சிக் கடவுளான முருகன் என்ற பொருளிலும் வழங்கி வந்துள்ளன. மேலும் இயற்கை அழகைப் பின்னணியாகக் கொண்டு சங்க இலக்கியங்கள் எழுதப் பட்டுள்ளதையும் காணமுடிகின்றது (Balachandran, 1982).

இயற்கையைக் 'கை புனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு' (எனப் பாராட்டுகிறார் நக்கீரர். மேலும் முருகன் குடி கொண்ட இடங்களைப் பற்றி நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் விளக்கும்பொழுது, "காடுங்காவும் கவின்பெரு துருத்தியும் யானுங்குளனும் வேறுபல வைப்பும்" எனப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது (Kalyanasundaram, 2001).

முருகு என்னும் சொல்லைத் தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்திருந்தாலும் தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையில் அச்சொல்லைப் பற்றி அதிக அளவில் ஆராய்ச்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, முருகு என்பது மிகப்பழைய தமிழ் இலக்கியச் சொல்லாக இருப்பினும் கலைப்படைப்போடும், இலக்கிய ஆக்கத்தோடும் கூடிய இச்சொல் பற்றிய முழுமையான புரிதல் தமிழ்ச்சூழலில் இல்லை என்பதை அறியமுடிகிறது. இருப்பினும் ஐரோப்பிய அமெரிக்க மொழி இலக்கிய ஆராய்ச்சித் துறையில் முருகியல் என்னும் கோட்பாடு பற்றிப் பல நூல்கள் எழுந்துள்ளன. இப்பின்னணியில் தமிழில் முருகு அல்லது அழகு என்பதனை விளக்கும் வகையில் முதன் முதலாக எழுந்த நூல் திரு.வி. கல்யாண சுந்தரனாரின் "முருகன் அல்லது அழகு" என்ற நூலாகும். இந்நூலில் அழகியல் சில இடங்களில் சமயச் சார்போடும், சில இடங்களில் சமயச் சார்பின்றியும் விளக்கப்பட்டுள்ளன. அழகு பற்றி திரு.வி.க. கூறும்போது,

அழகில்லா இடமுண்டோ? இவ்வுலகமே அழகு வடிவம். இவ்வழகிய உலகிடை நின்று அண்ணாந்து பார்த்தால், மேலும் கீழும் சுற்றும் முற்றும் அழகு சொரிவது காணலாம். அழகிய நிலப்படாத்தின் விரிவில் நித்திலந் தூவினாலென விண்மீன் வானத்திலூருஞ் செவ்விய அழகை என்னவென்று வருணிப்பது? ஞாயிற்றின் ஒளியை என்னவென்று நவில்வது? திங்களின் நிலவை என்னென்று செப்புவது? கோள்களின் மின்னலை என்னென்று கூறுவது? கரிய காட்டின் காட்சியை எப்படி எடுத்துக் காட்டுவது? கை நீட்டும் அலை கடலின் கவினை எங்ஙனம் கழறுவது? என்னே அண்டத்தின் அழகு! இவையெலாஞ் சேர்ந்த ஒன்றே இயற்கை யன்னையின் அழகு வடிவம். அவ்வழகே அழியா அழகு. அதுவே முருகென்னும் பேரழகு என்கின்றார் (Kalyanasundaram, 2001).

மேலும், இந்நூலில் இயற்கை என்னும் எனது ஆருயிர் அன்னைக்கும் 'அவ்வியற்கை விடுத்து என்றும் நீங்காத அழகு என்னும் அப்பனுக்கும் இந்நூலைக் கோயிலாக்கித் தமிழ் மலர்த்தூவி ஒல்லும் வகை வழிபாடு நிகழ்த்தியிருக்கிறேன் எனத் தம் முன்னுரையில் கூறுவதில் இருந்து அழகு பற்றிய அவரின் அணுகுமுறையை உணர முடிகிறது. இதன்படி, அழகு புறத்தே காணப்படுவது போல் அகத்தேயும் காணப்படுகின்றது. புறமும் அகமும் ஒன்றும்போது அழகுணர்வு வெளிப்படுகின்றது. இதற்குக் கருவிகளாக இருப்பவை புலன்கள் ஆகும்.

'அழகு' என்கிற கருத்தாக்கம் தொடக்க காலத்தில் இயற்கையை அடிப்படையாகக் கொண்டும், அதனை அடுத்த காலங்களில் இறைவனை மையமாக வைத்தும் பேசப்பட்டு வந்தன. மாறாக, தற்காலத்தில் அழகு எங்கு இருக்கும் என்கிற கேள்வி எழும்போது, இயைபுடைய ஒரு காட்சியில் இருக்கலாம், ஒழுங்கு முறைப்பட்ட ஒரு வடிவத்தில் இருக்கலாம், தகவுப் பொருத்தமுடைய ஒரு பொருளில் இருக்கலாம், மனித உடம்பில் இருக்கலாம், மெய்ப்பாட்டில் இருக்கலாம், ஒன்றன் அசைவில் இருக்கலாம், ஆட்டத்தில் இருக்கலாம், இயக்கத்தில் இருக்கலாம், ஒலியில் இருக்கலாம்,

ஒளியில் இருக்கலாம், வண்ணத்தில் இருக்கலாம் என பாலச்சந்திரன் அவர்கள் குறிப்பிடுகின்றார் (Sasivalli, 1995). எனவே, அழகு என்பதற்கு, ஒரு வகையான எல்லையை உருவாக்கி இந்த சட்டத்திற்குள் வருவதுதான் அழகு என்று உறுதியாகக் கூற இயலாது. ஆனால் அழகை இரு பிரிவுகளில் அடக்கலாம்.

ஒன்று இயற்கையழகு மற்றொன்று செயற்கை அழகாகும். 'கை' என்ற சொல்லுக்கு அழகு, கட்டழகு என்ற பொருளுண்டு. கை என்பதை அழகு என்னும் பொருளில் ஆளும்போது இயல்பாய் அமையும் அழகு இயல் + கை இயற்கை என்ற சொல்லாலும், செயலால் அமையும் அழகு செயல் + கை செயற்கை என்ற சொல்லால் முன்னோர்கள் அழகைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும் (Sasivalli, 1995).

## தமிழரும் அழகியல் சிந்தனைகளும்

தமிழரின் அழகியல் சிந்தனைக்கு அடிப்படையாக அமைந்திருப்பவை அவர்களின் கலைகளும் இலக்கியங்களும் ஆகும். பண்டைய காலத்தில் தமிழில் தோன்றிய இலக்கியங்கள் தமிழரின் வாழ்க்கை முறை, பண்பாட்டுக் கூறுகள், கலை மரபுகள் மற்றும் அழகியல் சிந்தனைகள் முதலானவற்றைக் கூறுவனவாக உள்ளன.

தமிழரின் அழகியல் சிந்தனை மரபு பற்றிய ஆய்விற்குச் சிறந்த ஆதாரமாகத் தொல்காப்பியம் கிடைக்கிறது. இந்நூல் தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலாகவும், கவிதை நூலாகவும் விளங்குகின்றது. எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களைக் கொண்ட இந்நூல், முதல் இரண்டு அதிகாரங்களில் இலக்கணத்தை பற்றியும் மூன்றாவதாக உள்ள பொருளதிகாரம் பண்டைத் தமிழ் மக்களின் இலக்கியம் பற்றியும் அதன் பொருள் மற்றும் சுவை பற்றியும் விவரிக்கின்றது. அவற்றுடன் பண்டைத் தமிழரின் அழகியல் சிந்தனைகளையும் விரிவாக எடுத்துரைக்கிறது.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சார்ந்த புலநெறி வழக்கங்

கலியே பரிபாட்டாயிரு பாங்கினு

முரியதாகும் என்மனார் புலவர்"

இந்நூற்பாவில் புலநெறி வழக்கு எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் கூறும் புலநெறி வழக்கு ஒரு வகையில் அழகியல் குறித்த எண்ணத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது (Arunachalam, 1994).

அழகியல் என்னும் சொல்லுக்கு இணையாக 'ஹநளவாநவiஉள' எனும் ஆங்கிலச்சொல் வழங்கப்படுகிறது. இதில் 'ஹநளவாநவiஉள' என்றால் புலன் உணர்திறன் என்று பொருள்படும். அந்த வகையில் தொல்காப்பியர் அழகியல் குறித்த சிந்தனையை மிக நுட்பமாகப் பதிவு செய்திருக்கிறார்.

தமிழின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியம் அழகு என்ற சொல் குறித்துப் பல இடங்களில் பதிவு செய்திருக்கிறது. அழகு என்ற சொல் பொருளதிகாரச் செய்யுளில் செய்யுட்குரிய உறுப்புகளுள் ஓர் இலக்கிய வகையாகச் சொல்லப்பட்டுள்ளது.

"செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்

அவ்வகை தானே அழகெனப்படுமே"

என்கிறது (Arunachalam, 1994). இது தவிர அழகு என்ற பொருள் தரக்கூடிய ஏர், எழில் என்ற சொற்கள் பொருளியலில்,

"ஒப்பும் உருவும் வெறுப்பும் என்னா

கற்பும் ஏரும் எழிலும் என்றா

சாயிலும் நாணிலும் மடனும் என்றா

நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது

காட்டலாகப் பொருள என்ப"

என இடம்பெற்றுள்ளன (Arunachalam, 1994). இவற்றிலிருந்து அழகின் பண்பை வழக்கியல் மரபுப்படி உணர முடியும். அதற்கென்று தனி வடிவம் தந்து வரையறை கூறுவது என்பது அரிது என இதன் மூலம் அறியமுடிகிறது.

## அழகின் நிலைகள்

அழகு என்பதற்கு வரையறை கொடுத்து இதுதான் அழகு என்று உறுதியாகக் கூற இயலாது. ஆனால், பண்டைய தமிழ்ச் சமூகத்தில் அழகை இருகூறுகளாகப் பகுத்திருந்தனர்.

### அழகு

1. இயற்கை அழகு, 2. செயற்கை அழகு

கை என்ற சொல்லுக்கு அழகு, கட்டழகு என்ற பொருளுண்டு. கை என்பதை அழகு என்னும் பொருளில் ஆளும்போது இயல்பாய் அமையும் அழகு, இயல் + கை = இயற்கை என்ற சொல்லாகவும், செயலால் அமையும் அழகு, செயல் + கை = செயற்கை என்ற சொல்லாகவும் நம் முன்னோரால் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

### இயற்கை அழகு

முருகன் அல்லது அழகு என்ற நூலில் திரு.வி.க. கூறும்போது "அழகினின்றும் அரும்பி மலர்ந்து காட்சியளிப்பது இயற்கை என்று சுருங்கச் சொல்லலாம்" என்கிறார். அழகைப் பல வடிவங்களாக இயற்கை வெளிப்படுத்தி உலகைக் கவர்ந்து மகிழ்ச்சியூட்டுகிறது. வானம், பூமி, கடல், மேகம், நதி முதலானவற்றின் அழகை இயற்கை அழகு எனலாம்.

வைகுறு வனப்பின் தோன்றும்

என நற்றிணைப் பாடல் காலை அழகையும் (Avvai Duraisamy pillai, 2010),

வாள்வனப் புற்ற அருவி

எனும் ஐங்குறுநூற்றுப் பாடலின் மூலம் அருவியின் அழகையும், இலக்கியங்களில் காணமுடிகிறது (Singaravadivelan, 2005). இயற்கையானது புலன்களின் வழியே உயிர்களைத் தன்வயப்படுத்துகிறது. மக்கள் அகம் புறம் என்கிற இருவேறு கூறுகளிலும் அழகை இரசித்திருக்கின்றனர்.

### புற அழகு குறித்த பாடல்கள்

வல்லோன் எழுதியன்ன காண்தகு வனப்பின் ஐயள்

பாவையன்ன வனப்பினள் இவளென

வேய் வனப்புற்ற தோளை

பிறை வனப்புற்ற மாசறு திருநுதல் (Avvai Duraisamy pillai, 2010)

செம்மால் வனப்பெல்லாம் நுந்தையை ஒப்பினும்

இவ்வாறு தமிழிலக்கியத்தில் பல இடங்களில் புற அழகைக் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன (Viswanathan, 2007).

## அக அழகு

தமிழிலக்கியத்தில் புற அழகைக் குறித்த பதிவுகள் இருப்பதைப் போன்று அகம் சார்ந்த பதிவுகளும் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றை,

"வாள்வென்று வருபவர் வனப்பு ஆர விடுவதோ?

வாய்மையுடைமை வனப்பாகும்

கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை

மாண்டமைந்(து) ஆராய்ந்த மதிவனப்பே"

எனக் கலித்தொகையும், திரிகடுகமும், சிறுபஞ்சமூலமும், ஏலாதியும் குறிப்பிடுவதைக் கொண்டு பழந்தமிழ் இலக்கியங்களில் அழகு பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது (Viswanathan, 2007).

மனிதன் உலகில் உள்வாங்கிக் கொண்ட எண்ணங்களுக்கேற்ப அவனுடைய அழகியல் சிந்தனை உருவாகிறது. புலன்களின் பயிற்சிக்கேற்ப அழகின் பார்வையும் அமைகிறது. கலை உணர்வுடன் வாழ்வை நோக்கி இயங்கும் மனது அழகைத் தேடுகிறது.

## செயற்கை அழகு

இயற்கை அழகை எவ்வாறு தமிழர்கள் கண்டு இன்புற்றனரோ அதேபோல் செயற்கை அழகையும் உருவாக்கி இன்புற்றனர். இயற்கையில் இருந்து கிடைத்த அழகியல் கூறுகளை அனுபவித்து, சுவைத்து அதன் மிகுதியாகக் கலையைப் படைக்கும் முயற்சியிலும் பண்டைய தமிழர் ஈடுபட்டு உள்ளனர். இதன்படி கலையை உருவாக்குபவன் கலைஞன் என்றும் அக்கலைத்துறையில் மேன்மை பெற்று வல்லமையோடு விளங்குபவரைக் கலை வல்லோன் என்றும் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டனர்.

காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்

என்றும் கலைஞனது படைப்பாற்றல் வெளிப்படும் செயல்திறன் அழகினை இலக்கியங்களில் காண முடிகிறது. கலைஞனது சிந்தனைத் திறனுக்கு ஏற்றவாறு பல்வேறு கலைகள் தோற்றம் பெற்றன (Sasivalli, 1995).

இயற்கையையும், செயற்கையையும் மனிதன் அழகியல் உணர்வோடு கலந்து காண்பது இயல்பு. ஒரு பொருளின் அழகு அல்லது சிறப்பினை உணரும்போது உள்ளத்தில் ஏற்படும் எழுச்சி மன மகிழ்ச்சியாகிறது. இவற்றுடன் இன்பம் மட்டுமின்றி துன்பமும் துன்பவியல் உணர்வுகளும் கலைப்படைப்பில் அழகியலாக மாறுகிறது.

இயல், இசை, நாடகக் கூறுகளில் துன்பியல் உணர்வுகள் அழகுணர்வாகவும் அகம் சார்ந்ததாகவும் அமைகிறது. ஆகையால் இது உளவியல் சார்ந்த ஒன்றாக இருப்பதை உணர்ந்து கொள்ள முடியும். இத்தகைய அழகியல் உணர்வு குறித்து, அழகியல் சார் உளவியல் என்பது இயற்கையிலும் மனிதனின் படைப்பிலும் காணப்படும் அழகு பற்றி ஆய்ந்தறியும் ஓர் அறிவியல் துறையாகும். செயற்கை அழகு, மனிதனின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப இயற்கையோடு இயைபுற, எண்ணத்திலும் காட்சியிலும் சொற்களிலும் அமைக்கப்படுவது ஆகும். இத்தகைய இயற்கை யிலும் கற்பனையிலும் காணப்படும் அழகு, ஓர் அடிப்படைக் கோட்பாடின்றி அமைதல் இயலாது. இவ்வழகுக் கோட்பாடும் அழகுணர்வின் தத்துவமும் அழகியலின் அடிப்படைகள் ஆகின்றன என வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுவது இன்றியமையாததாகும் (Avner Zis, 1984). இவ்வாறு அழகு என்பது மனித அறிவால் உணரப்பட்டு காலப்போக்கில் அது தனித்த ஒரு சிந்தனைக் கோட்பாடாக மலர்ந்தது. மேலும், அழகியலுக்குரிய விளக்கங்களும் பல்கிப் பெருகி அதனடிப்படையில் பல கருத்தாக்கங்களும் உருவாயின.

## மேலைநாட்டு அழகியல் சிந்தனைகளும் விவாதங்களும்

அழகியல் என்பது உலகளாவிய நிலையில் அனைவரும் அறிய விரும்பும் ஒன்றாக இருக்கிறது. குறிப்பாக, அழகு என்பது அவரவரின் அறிவு, அனுபவம், சூழல், கற்பனை ஆகியவற்றிற்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. இந்த வேறுபாடு அவரவருக்கான புரிதலைப் பொருத்து அமைகின்றது. ஆகவேதான் அழகு என்பதன் கல்வி, அழகியல் என்று கூறப்படுகிறது. அழகியல் கல்வி என்பது கலைகள், படைப்பாளர்கள், சுவைஞர்கள், திறனாய்வாளர்கள் ஆகியோரைச் சார்ந்து அமைகிறது. எனவேதான் அழகியலைப் பற்றிக் கூறவரும்போது, கலைகளில் உள்ள அழகைப் பற்றிப் பேசுவதும், ஒரு கலையின் அடிப்படையையும், அதனைச் சார்ந்த கலைக்கொள்கைகளைப் பற்றிக் கூறுவதும் அழகானவற்றை உணர்தலும் இயற்கையையும் மனித சமுதாயத்தையும் அழகானவை என்னும் நோக்கத்தில் அணுகுவதும் அழகியலாகும். சுருங்கக்கூறின் அழகை உணர்வதே அழகியலாகும் என நா. வானமாமலை அவர்கள் பதிவு செய்கின்றார். இப்பின்னணியில் அழகியலை அணுக வேண்டியது இன்றியமையாததாகின்றது. அழகியல் சிந்தனை அது அரும்பும் மண்ணைச் சார்ந்து வெளிப்படுவதால் நாட்டிற்கு நாடு அச்சிந்தனை வேறுபடுகிறது. அவ்வகையில், மேலை நாடுகளில் அழகியலை ஒரு கோட்பாடாகவும் தத்துவத்துறையில் ஒரு பிரிவாகவும் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி போற்றி வளர்த்தனர்.

மேலும், அழகியல் ஆங்கிலத்தில் 'Aesthetics' எனப்படுகின்றது. 'Aesthetics' என்னும் சொல் உணர்திறன், புலன்களின் வாயிலாக உணரும் திறன், என்ற பொருளுடைய Aisthetickos என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப் பட்டது. பிரடரிக் ஊல்ஃப் என்னும் பிரெஞ்சு தத்துவஞானியின் மாணாக்கரும், ஜெர்மன் கலைக் கொள்கையாளருமான அலக்சாண்டர் பாம்கார்ட்டனால் இச்சொல் ஒரு குறிப்பிட்ட அறிவியல் துறையைக் குறிப்பிடும் வகையில் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. அவர் 'Aisthetica' என்னும் நூலை எழுதினார். அதன் முதற்பாகம் 1750 இல் வெளியிடப்பட்டது. அதிலிருந்து இந்தச் சொல் விஞ்ஞான அறிவின் ஒரு துறையைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படலாயிற்று. ஆனால் இதை வைத்துக் கொண்டு, விஞ்ஞான ரீதியான அழகியல் பாம் கார்ட்டன் காலத்திலிருந்துதான் தொடங்கியது என்று எந்த விதத்திலும் பொருள் கொண்டுவிடக்கூடாது. அதன் தொடக்கம் நம்மைப் புராதன காலத்துக்கே அழைத்துச் செல்கிறது (Avner Zis, 1984). எனக் குறிப்பிடும் ஆவ்னர்ஸி அவர்களின் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

ஜெர்மன் நாட்டுக் கலைக்கொள்கையாளரான பாம்கார்ட்டன் கூறும் அழகியல் என்பது மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகின் அழகை அறிந்து கொள்ள உதவுகின்ற புலன்வழி அறிவாகும் என்கிறார். இவரது கருத்துப்படி அழகு, பொருள்களின் அழகினின்றும் தனித்துக் காணப் படுகிறது. மேலும், சில நேரம் அழகிய பொருளானது அழகற்றதாகவும், அழகற்றவை அழகுள்ளதாகவும் கருதப்படுவதும் அழகியலில் ஒரு கூறாகக் காணப்படுகின்றது.

அழகுணர்வு என்பது தனிப்பட்ட ஒருவரின் மனம் மற்றும் புலனறிதலுக்கு ஏற்றவாறு அமைவதாகும். இவ்விடத்தில் இத்தாலி நாட்டைச் சார்ந்த ஆய்வாளர் குரோசே என்பவர் கூறியுள்ளதை நினைவில் கொள்ள வேண்டும். இவை மட்டுமின்றி, பாம்கார்ட்டன் ஒரு புதிய அறிவியல் துறையை அறிமுகப்படுத்தினார். அத்துறை முழுமையான வளர்ச்சியைப் பெறுவதற்கு முன்பே அதற்கு அவர் அழகியல் என்று பெயரிட்டார். அப்பெயர் ஒரு புதிய பொருளின் பெயராக இருக்கிறது. எனவே, அழகியல் என்பதன் உட்பொருள் எது என்பது குறித்தும் அதற்கு வரையறை கூறுவது என்பதும் ஆய்வுக்குரிய ஒன்றாக உள்ளது என்கிறார். இச்சூழலில் பாம்கார்ட்டன் அவர்களைப் போன்றே, அழகு ஒவ்வொருவரையும் பொறுத்த தனித்தன்மை உடையது. ஒவ்வொரு கலைப்படைப்பும் பிறவற்றினின்றும் வேறுபட்டமையால் அவற்றைப் பொதுவான இனவாரியாகக் கோடிட்டுக் காட்ட முடியாது. அழகுணர்ச்சியைத் தரவாரியாகவும் விவரிக்க முடியாது. ஒவ்வொரு கலைப்படைப்பின் அழகும் வேறெதோடும் ஒப்பிட முடியாத தனித்தன்மையோடு இயங்குவது. ஒரு உள்ளுணர்வின் வெளிப்பாடு அதைவிடச் சிறந்ததாகவோ, மாறுபட்டோ, தாழ்ந்ததா கவோ இருக்க முடியாது. அழகைப் பாகுபடுத்தி, வெவ்வேறு கூட்டிற்குள் அடைக்க முடியாது. எந்தஒரு கலைப்படைப்பும் கவிதையோ இசையோ, ஓவியமோ தர்க்க ரீதியானதன்று. எனினும் அது உள்ளுணர்வின் வெளிப்பாடு என்கிற

மொழி வழியாகத் தெளிவாகப் பேசும் தன்மையது. உட்பொருளும் வடிவமும் உடையது. கலையனுபவமானது உணர்ச்சிகளின் துடிப்பு, கலை அழகுணர்ச்சியின் சேர்க்கை எனக் குரோசோ அவர்கள் கலையை அழகியலுடன் பொருத்திப் பேசுகின்றார் (Sasivalli, 1995). அவ்வகையில், குரோசோவின் இக்கருத்துப்படி எந்தவொரு கலைப்படைப்பும் தனித்தன்மையானதாகும். ஆகவே ஒரு கலைப் படைப்பையும் மற்றொரு கலைப்படைப்பையும் ஒப்பிடுதல் மற்றும் அவற்றின் குறைநிறைகளைத் திறனாய்விற்கு உட்படுத்துதல் என்பது சரியானதல்ல. இதன்படி, கி.பி. 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வாழ்ந்த சமய ஒழுக்கவாதிகளும் அறிவியலாளரும் அழகியலுக்குப் புறவயமான அடிப்படையைக் கொடுத்தனர்.

காண்ட் போன்ற அழகியல் சிந்தனையாளர்கள் இலக்கியம் சார்ந்த கலைப்படைப்புகளால் மக்கள் உள்ளத்தில் எழுவதே அழகு என்றும் அறிவுக்கும் கற்பனைக்கும் பொருந்திய நிலையிலிருக்கும் பொருள்களே அழகுடையனவாகக் கருதப்படவேண்டும் என்று கருதினர். ஆனால் அழகுடைய பொருள்களைப் படைப்போரின் உள்ளத்தால் அறிந்து செயலூக்கம் பெற்று எழும் கலையே அழகியலுக்கான அடிப்படை என்பது குரோசோவின் வாதமாக இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

காலிங்வுட் (Colling Wood) என்கிற மேலைநாட்டு ஆய்வாளரும் குரோசோவின் அடியொற்றி இத்தகைய அழகியல் பற்றிய சிந்தனைகளை ஏற்றுக் கொள்கிறார். இருப்பினும் கலைப்படைப்புகளை அழகுள்ளவை, அழகற்றவை எனத் தரம் பிரித்துக் காண இயலும் என்றும் கலைப் படைப்புகளின் தரத்தை ஒப்பிட முடியுமென்றும் காலிங்வுட் கூறுகின்றார். இதன்படி, எது உண்மை? எது பொய்? எது நன்மை உடையது? எது தீமை உடையது? என்று வேறுபடுத்தி அறிவதைப் போன்று கலைப்படைப்புகளிலும் அழகுள்ளவை என்றும் அழகற்றவை என்றும் பகுத்துப் பார்க்க இயலும். மேலும், அழகு என்பதை அனுபவிப்பதோடு புரிந்து கொள்ளவும் முடியும். இப்பின்னணியில் காணும்போது அழகு வெறும் விவரிக்க முடியாத உள்ளுணர்ச்சி மட்டுமல்ல, மதிப்பிடவும் ஒப்பிடவும் முடியாத தனித்தன்மை அழகிற்கு உண்டு என்கிற கருத்து நிலவுவதை உறுதி செய்ய முடியும். மாறாக, கலைத்துவம் என்ற ஒன்று இருக்க முடியாது என்றும், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லுனர்கள் ஏற்படுத்திய வரன்முறைகளைக் கொண்டு அழகின் தன்மையை ஒப்பிட்டுப் பார்க்க முடியும் என்கிற கருத்தும் காலிங்வுட் வெளிப்படுத்துவதை அறிய முடிகிறது. இவ்வாறு பலவகைப் பட்ட கலை அனுபவங்களை ஒன்றுபடுத்தும் வகையில் கலைத்துவம் உதவுகிறது. மாறாக, குரோசோ, உள்ளுணர்ச்சிக்கும் அதன் வெளிப் பாட்டிற்கும் என்ன வேறுபாடு என்று தெளிவாகக் குறிப்பிடவில்லை. அவ்வாறு வேறுபாடு இல்லை என்றால் இரண்டில் ஒன்றைக் குறிப்பிட்டாலே போதும் என்று கருத வேண்டியுள்ளது.

அழகியலைத் தத்துவத்தின் ஒரு பிரிவாகப் பார்க்கும் பார்வையும் அழகியல் ஆய்வில் காணப்படுகின்றது.

ஒருவன் அழகான பொருள்களை எதிர்கொள்ளும்போது ஏற்படும் சிக்கல்களுக்கான முடிவும் அப்போது ஏற்படுகின்ற கருத்துகள் பற்றிய ஆய்வும், இவை குறித்த தத்துவத்தின் ஒரு பிரிவுமே அழகியல் ஆகும் எனத் தத்துவக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகிறது. இதே கருத்தையே அழகியல் என்பது அழகிய பொருள்கள் அல்லது அழகற்ற பொருள்கள் பற்றிய அறிவியல் பூர்வமான அறிதல் ஆகும் என சேம்பர் லைக் களஞ்சியமும் குறிப்பிடுகிறது (Vivekanandan, 1989).

எனவே அழகியலை அறிந்து கொள்ள அறிவியல் பூர்வமான சிந்தனையும் தேவை என்பதை உணரலாம். இத்தகைய சிந்தனையைத் தனியே தேடி அலையாமல் அவற்றை வாழ்க்கையிலிருந்தும் வரலாற்று அறிவிலிருந்தும் பெற முடிகிறது. இந்த நிலையில் மனிதனின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள அழகியல் வரலாறு துணை செய்கிறது.

பாஸ்பிலொவ் என்பவர் வரையறுத்தபடி அழகியல் ஒரு தனிப்பட்ட அறிவியல் துறையன்று. அது எதார்த்த உலகின் எந்த விதியும் இணைத்து நிற்கவில்லை. ஆகவே அழகியல் என்பதை தத்துவத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளலாம்.

அழகியல் பற்றிய தொடர்ச்சியான விவாதங்களில் 'ஹெகலின்' கருத்தும் குறிப்பிடத்தக்கது. ஹெகல் தனது அழகியல் என்ற நூலில் அழகியல் என்பது கலைகளின் குறிப்பாக நுண்கலைகளின்

பொதுவான கொள்கைகள் பற்றிய விஞ்ஞானம் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் செர்னியேவஸ்கி அழகியலைத் தனியானதாகவும் கலைக்கொள்கை களைத் தனியானதாகவும் காண்கின்றார். இவ்விரண்டையும் வேறுவேறான விஞ்ஞானமாகக் கருதினாலும் செர்னியேவ்ஸ்கி அழகியல் கலைகளின் பொதுவான கொள்கையாக முதன்முதலில் விளங்கியது என்பதில் உடன்படுகின்றார். இருப்பினும் இவற்றுடன் கலைகளின் சமூக நோக்குகளையும் இணைத்துப் பார்க்க வேண்டும் என்பதே அவருடைய கருத்தாக உள்ளது. இந்நிலையில், பாஸ்பலோவ் என்ற அறிஞர் அழகியல் வேறு, கலையியல் (Artistic) வேறு எனக் கணிக்கின்றார். இவர் அழகியலைக் கலையிலிருந்து முற்றாகப் பிரிக்கின்றார். இவர் ஹெகல் காலத்திலிருந்து தனித்தொரு இயலாக விளங்கி வந்த கலை வரலாறு குறித்த விஞ்ஞானம் தவறுதலாக அழகியல் எனப் பெயரிடப்பட்டுவிட்டது எனக் கருதுகின்றார். இவர் அலெக்ஸாண்டர் பார்ம்கார்ட்டனின் கருத்தான உணர்திறன் மூலமாகப் பெறப்படும் அறிவே அழகியல் என்னும் கருத்துடன் உடன்படுகின்றார். இவர் அழகான பொருள்களுடன் ஏற்படும் புறநிலை அனுபவங்களின் அறிவியல் அணுகுமுறையும், உண்மையான யதார்த்தமான உலகோடு ஏற்படும் மனிதனின் புரிதலுமே அழகியல் எனக் கருதுகின்றார் (Vivekanandan, 1989).

இத்தகைய உண்மைநிலை பகுத்தறிவுக்கு உட்பட்டது என்ற சிந்தனையை ஒட்டியே ஹெகலின் அழகியல் பற்றிய கருத்தும் அமைந்துள்ளது. அழகு என்பது எளிதில் உணரக்கூடியது. மேலும் உள்ளத்தினால் உணரப்படுவது என்ற கருத்தினையும் ஹெகல் வெளிப்படுத்துகின்றார். இவற்றுடன், அழகிற்கு ஒரு அளவுகோல் உண்டு என்பதோடு அல்லாமல் அழகியலின் வெளிப்பாட்டில் மூன்று நிலைகளையும் குறிப்பிடுகின்றார். அவை பின்வருமாறு அமைகின்றன.

## அழகின் வெளிப்பாட்டு நிலைகள்

அழகின் வெளிப்பாட்டு நிலைகளை மூன்று வகைகளாகப் பகுக்கலாம். அவை, குறியீட்டு நிலை, சாஸ்த்ரீய நிலை, கற்பனை நிலை என்பனவாகும். ஒவ்வொரு அழகியல் வெளிப்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே உள்ளன.

### குறியீட்டு நிலை

குறியீட்டு நிலை என்பவை உண்மை அழகை வெளிப்படுத்த இயலாதவைகளாகவே உள்ளன. இவ்வகையில், இவை கடவுளுக்குக் கோயிலைக் கட்டிவிட்டு கடவுளைப் பற்றி விவரிக்க முடியாமல் போவதைப் போன்று இருப்பவையாகும்.

### சாஸ்த்ரீய நிலை

இந்நிலையின்படி மனித வடிவம் ஆன்மீக நிலைக்கு உயர்த்தப் படுகிறது. இதன்படி, சிற்பக்கலை இந்நிலையைச் சார்ந்தது.

### கற்பனை நிலை

இந்த நிலையில்தான் கலை தன்னையே உணர்கிறது. குறிப்பாக, இசை, ஓவியம், கவிதை ஆகியவை இந்நிலையைச் சார்ந்தவையாகும். இவற்றில் கலை புலன் உணர்வுகளின் சேர்க்கையிலிருந்து விடுபட்டு இசைக்காவியம், நாடகம் ஆகிய பிரிவுகளாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் திகழ்கிறது. இக்கூற்றின்படி அழகியலைப் பற்றிய தனது விவாதத்தில் அழகிற்கான எல்லைகளை வரையறுக்க ஹெகல் முற்படும்பொழுது கலையைச் சார்ந்த அவரின் கருத்து சற்றே பின்தங்கிவிடுகிறது எனக் கருத வேண்டியுள்ளது.

கலையிலிருந்து சமூகத்தைப் பிரிப்பதும், சமூகத்திலிருந்து கலையைப் பிரிப்பதும் இயலாத ஒன்றாகும். இதன்படி, கலை சமூகத்தைப் பிரதிபலிக்கும் ஆற்றலாக விளங்குகிறது. இவ்வாறு கலையைத் தனக்குள் வாங்கிக் கொண்ட ஒரு நிலையில் தான் சமூகம் உள்ளது. எனவே

செர்னியேவஸ்கியின் கொள்கையை ஏற்றுக் கொள்ளலாம். இதே கோணத்தில்தான் பாஸ்பலோவ்வின் கருத்தையும் அணுக வேண்டியுள்ளது. மாறாக, அழகியலைக் கலையிலிருந்து பிரித்துப் பார்ப்பதென்பது எதார்த்த உலகத்திற்கு எதிரான விளைவைத்தான் ஏற்படுத்தும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மாறாக, எதார்த்தத்தைப் புறக்கணித்துவிட்டு அழகியலைக் காண இயலாது என்பதை உணர்ந்த பாஸ்பலோவ், பாம்கார்ட்டனின் அழகியல் கருத்தோடு உடன்படுகிறார். அவ்வாறு உடன்படும்போதும் அழகியல் என்பதன் பொருள் பற்றியும் அதன் வரையறை குறித்தும் பல கருத்து முரண்பாடுகள் இருவருக்கும் ஏற்படுகின்றன. இச்சூழலில் தொடக்க காலத்திலிருந்து அழகியல் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பிளாட்டோவின் கருத்தே முதன்முதலில் தெளிந்த வடிவமாகக் கிடைக்கிறது. அக்கருத்தில், அழகு என்பது பலதிறப்பட்டது என்று கூறி அதற்குப் பூரணமான அல்லது மாற்ற முடியாத உருவம் இல்லையென்று கூறுபவனிடம் ஒரு கேள்வி கேட்பேன். அழகிய காட்சிகளை நேசிக்கும் உன்னுடைய ஆள், அழகு ஒன்றே என்றோ, நீதி ஒன்றே என்றோ, வேறெதுவும் ஒன்றே என்றோ சொல்லப்படுவதைப் பொறுக்க மாட்டான். இந்த ஆளிடம் ஐயாவே இந்த அழகுப்பொருட்களில் எல்லாம் ஏதாவதொன்று அவலட்சணமாக இல்லையா? என்று கேட்க விரும்புகிறேன். நீதியானவற்றினுள் நீதியற்ற ஒன்றே இருக்கிறதா? பரிசுத்தமானவற்றுள் அசுத்தமான ஒன்று இருக்காதா? என்றும் கேட்க விரும்புகிறேன் என்கிறார் (Vivekanandan, 1989). பாஸ்பலோவ்வின் இக்கருத்துப்படி, அனைத்துப் பொருட் களுக்கும் இன்னொரு அறியப்படாத பக்கமும் இருக்க வேண்டும். அந்த இன்னொரு பக்கம் முதலில் கண்டவற்றோடு முரண்பட்டதாக இருக்கவும் வாய்ப்புள்ளது. எனவே அழகான பொருள் அழகானதாய் மட்டும் இருப்பதில்லை என்பதும் அவலட்சணமான பொருள் அவலட்சணமாக மட்டுமே இருப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அழகியலை ஒரு கோட்பாடாகக் காணும் அளவிற்கு வளர்ந்த பிறகும் கூட உலகைப் பற்றிய தனது கண்ணோட்டம் எவ்வாறு அமைகின்றதோ அதற்கேற்பவே அழகியல் பற்றிய தனது கண்ணோட்டத்தை அழகியலாளர்கள் அமைத்துக் கொண்டு வந்துள்ளனர். இதனைக் கு. விவேகானந்தன் அவர்கள், அழகியல் என்பது அழகான பொருள்கள் பற்றிய ஆய்வு மட்டுமல்ல, அழகற்றவை பற்றிய ஆய்வும் கூட. இருப்பினும் அழகு பற்றிய விஞ்ஞானம் வரன்முறைக்குட்பட்டச் சிறப்பான பொருள்கள் பற்றிய ஆய்வு ஆகும். பெரும்பாலும் கலைப்படைப்புகளில் அழகு பற்றிய பொதுக்கூறுகள் மற்றும் அதன் கொள்கைகள் பற்றிய ஆய்வுகள் இவற்றுடன் அதன் தரத்தைத் தீர்மானிப்பதற்கும் அழகியல் முக்கியமானதாகக் கருதப்படுகிறது எனப் பதிவு செய்கின்றார் (Padmavathi, 1985). இதன்படி, அழகியல் என்பது அழகான பொருட்கள் பற்றிய ஆய்வு மட்டுமின்றி அழகற்ற பொருட்கள் பற்றிய ஆய்வாகவும் விளங்குவதை உறுதி செய்ய முடிகிறது.

ஒவ்வொரு அழகியலாளரும் தனது பார்வையில் தனது புரிதலில், தனது கோணத்தில் அழகியலுக்கான விளக்கங்களைக் கூறிச் சென்றுள்ளனர். இது மட்டுமே அழகியல் என விளக்கம் கொள்வதற்கில்லை. அழகின் கருத்தாக்கம் நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. இவ்வாறு கிளைத்த அழகியல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான அரசியலை முன்வைக்கின்றது. இப்பின்னணியில், அழகியலானது ஓர் ஒருமைப்பட்ட அறிவியற் கருத்துகளின் கோட்பாட்டு முறையில் அமையும் வாய்ப்பைப் பெற்றது. மேலும், கலைப்படைப்பின் விதிகளுக்கும் அந்த படைப் பாக்கத்தின் சிறப்புகளுக்கும் சமூக நலத்துடன் அதற்குரிய தொடர்புக்கும் ஒரு நிலையான அறிவியல் விளக்கத்துடன் அழகியலைத் தொடர்பு படுத்துவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது (Avner Zis, 1984).

அழகியலின் நோக்கம் என்ன? கலைக்கும் அரசியலுக்குமான தொடர்புகளில் சமூகத்தின் இடம் என்ன? கலையைப் படைப்பவனுக்குள் நிகழும் அழகியல் சார்ந்த புரிதல்கள் எதை நோக்கிப் பயணப்படுகிறது? என்பதைப் போன்ற பல வினாக்களையும் அழகியல் முன் வைக்கின்றன.

இத்தகைய வினாக்களை எழுப்பும் அழகியல், ஒரு காட்சியிலும் இருக்கலாம். ஒழுங்குமுறைப்பட்ட வடிவத்திலும் இருக்கலாம். ஒலியில் இருக்கலாம், உடலில் இருக்கலாம், மெய்ப்பாட்டில் இருக்கலாம், இப்படி எங்கு இருப்பினும் அவற்றை உள்வாங்கிக் கொள்ளும் புரிதலில்தான் அவற்றிற்கான மாறுபாடுகள் நிகழ்கின்றன. இத்தகைய மாறுபாடுகளே அழகியலின் வகைப்பாடுகளுக்கும் வெவ்வேறான வரையறைகளுக்கும் காரணமாக அமைகின்றன.

## முடிவுரை

அழகியல் குறித்த கருத்தாக்கம் காலச்சூழலுக்கும், ஒவ்வொரு நாட்டுச் சூழலுக்கும், வர்க்கச் சூழலுக்கும் ஏற்ப மாறுபடுவதால் அதன் அழகுணர்விலும் மாறுதல் ஏற்படுகிறது. புலன்கள் அழகுணர்வுக்கு அடிப்படையாக அமைவதால் அப்புலன்களின் வழியே அழகை உள்வாங்கிக் கொள்ளுதலில் பல வேறுபாடுகள் நிகழ்கின்றன. உடல் சோர்வுற்ற நிலையைப் பொறுத்தும், ஒவ்வொருவரின் அறிவாற்றலைப் பொறுத்தும், கற்பனையாற்றலைப் பொறுத்தும் அழகை உணரும் தன்மையில் மாறுபாடுகள் நிகழ்கின்றன. ஒருவருக்கு அழகாகக் காட்சி தரும் ஒரு கலை மற்றொருவருக்கு அழகற்றதாகத் தோன்றலாம். இதன் அடிப்படையில் நோக்கும்பொழுது கலையை உள்வாங்கிக் கொள்ளும் மன உணர்வைப் பொறுத்தே அழகியலின் அளவீடு அமையும் என்பதை இவ்வாய்வில் உறுதி செய்ய முடிகின்றது. அழகியல் என்பது அழகான பொருட்கள் பற்றிய ஆய்வு மட்டுமல்ல, அழகற்றவை பற்றிய ஆய்வையும் உள்ளடக்கிய தாகும். ஒவ்வொருவரும் தனது புரிதலில், தான் கலையை அணுகும் கோணத்தில் அழகியலுக்கான விளக்கங்களைப் பெற்றாலும் இவற்றை மட்டுமே அழகியல் குறித்த இறுதியான விளக்கம் என ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை அறியமுடிகின்றது. கலையைப் படைக்கும்பொழுது கலைஞன் தன் உணர்வைக் கலையின் மீது செலுத்த அவ்வுணர்வு கலையாக வெளிப்படுகிறது. இவ்வுணர்வுதான் கலையைச் சுவைப்பவருக்கு இன்னொரு உணர்வைத் தோற்றுவிக்கும் காரணியாகிறது.

## References


Avner Zis, (1984) Marxiya Alakiyalin Adipadaikal, New Century Book House, Chennai, India.

Balachandran, S., (1982) Ilakkiya Eyyangalum Thiranaivum, Komathi Library, Chennai, India.

Kalyanasundaram, (2001) Murugan Allathu Azhagu, Manivaasagar Pathippagam, Chennai, India.

Padmavathi, V., (1985) Ilakkiyathil Alagiyal Latchiyam, Vallisundar Pathippagam, Chennai, India.

Sasivalli, V.C., (1995) Alakiyal Sinthanaigal, International Institute of Tamil Studies, Chennai, India.

Vivekanandan, K., (1989) Azhagiyal, Jeevala Pathippagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License